UNIVERSITY OF JAFFNA
RECEIVED
2-5-1986
PERIODICALS DIVISION
LIBRARY

# இன்று நடைபெறும் பேச்சில் கூட்டணி ஆலோசனை பரிசீலிக்கப்படும்?

விலை ரூபா 1-25

ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 சித்திரை 19 ஷஃபா 22 இதழ் 80

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 2-5-1986

(கொழும்பு)

இனப்பிரச்னைக்குப் பேச்சு வார்த்தை மூலம் தீர்வுகாணும் பொருட்டு இந்திய இணை அமைச்சர் திரு. சிதம்பரம் தலைமையில் இலங்கை வந்துள்ள இந்திய உயர்மட்டக் குழு டாக்டர் திரு. நீலன் திருச்செல்வத்தையும் முன்னாள் மன்னார் எம். பி. திரு. பி. சூசைதாசனையும் நேற்றுச் சந்தித்து விரிவான ஆலோசனையை நடத்தியது.

இந்த ஆலோசனைகளின் போது காணிக்குடியேற்றம், பகிர்ந்தளிப்புக்குறித்து இந்திய க்குழுவிடம் எடுத்துக்கூறப் பட்டது.

மகாவலி திட்டத்தின் கீழ் வடக்கு, கிழக்குப்பகுதிகளில் பகிர்ந்தளிக்கப்படும் காணிகள் தமிழ்பேசும் மக்களுக்கு வழங்கப்படவேண்டும் என்றும் அவ்வாறே, மகாவலித்திட்டத்தின் 'பி' பிரிவின்படி மட்டக்களப்புப்பகுதியில் பகிரப்படும் 18,000 பேருக்கான குடியேற்றத் திட்டம் அங்கு வாழும் தமிழ்பேசும்மக்களுக்கே பகிரப்படவேண்டும் என்றும் இந்தியக் குழுவிடம் வலியுறுத்தப்பட்டது.

இந்திய உயர்மட்டக்குழு நேற்று முன்தினம் அரசுடன் நடத்திய பேச்சுக்களின்போது அரசின் கருத்துக்களும், பன நிலையுமே அறியப்பட்டதாகக் ருதப்பட்டது, அத்துடன் இந்திய உயர்மட்டக்குழுவிடம் தமிழர் விடுதலைக் கூட்டணி முன்வைத்த சந்தேகங்களும் அரசிடம் சமர்ப்பிக்கப் படடு, அரசின் விளக்கங்களும் பரிசீலிக்கப்பட்டன.

இலங்கை அரசகுழுவுடன் இன்னொரு சுற்றுப் பேச்சு வார்த்தைகள் இன்று வெள்ளிக்

(5ம் பக்கம் பார்க்க)

# போராளிகள் மோதலை நிறுத்த இந்திய அரசு முயற்சி

(கொழும்பு)

இருபோராளிகள் குழுக்களுக்கிடையே ஏற்பட்டுள்ளகோஷ்டிச் சண்டையை முடிவுக்குக் கொண்டுவர இந்திய அரசு முற்பட்டுவருவதாக ஏ.எவ். சி. செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இந்திய அரசு தமிழ்நாடு அரசுக்கு விடுத்துள்ள கோரிக்கையில், இந்த மோதல்களை நிறுத்தும்படி கேட்கப்பட்டுள்ளதாக மேற்படி செய்தி ஸ்தாபனம் மேலும் தெரிவித்துளளது.

**'ரெசோ' ஆர்வம்**

இது இவ்வாறிருக்க தமிழ் போராளிகள்குழுக்களிடையே யான மோதலைததீர்த்துவைப் பதற்கு 'ரெசோ' இயக்கம் முயற்சி மேற்கொள்ளவி ப்ப தாக அதன் அமைப்பாளர் கலைஞர் மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

''இலங்கைத் தமிழ்ப்போராளிகள் மத்தியில் ஏற்பட்டுள்ள மோதல்களைத் தீர்ப்பதற்கு இயன்ற அனைத்தையும் 'ரெசோ' இயக்கம்மேற்கொள்ளும்'' என்று கலைஞர் கருணாநிதி கோயம்புத்தூரில் பத்திரிகையாளர் மத்தியில் நேற்றுப் பேசுகையில் கூறினார்.

இலங்கை இனப்பிரச்னை குறித்துத் தற்போது கொழும்பில் நடைபெறும் பேச்சுவார்த்தைகள் பயனளிக்கும் என்று தாம் நம்பவில்லை என்று கூறிய கருணாநிதி, இப்பிரச்னையில் தமிழ்நாடு மட்டுமன்றி, இந்தியாவிலுள்ள அக்கறை அரசியல் கட்சிகளும் அக்கறை கொண்டிருப்பதைக் காட்டும் வகையிலும், இப்பிரச்னையைத் தீர்க்க மத்திய அரசு துரித நடவடிக்கையை எடுக்கவேண்டும் என்ற வகையிலுமே மதுரையில் 'ரெசோ'அமைப்பு கூட்டப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் நடைபெற்றுவரும் போராளிகள் மோதலை ஒரு முடிவுக்குக் கொண்டுவரத் தமிழர் விடுதலைக் கூட்டணியும் தீவிரமாக முயன்றுவருகிறது.

இவ்விடயம் தொடர்பாகத் தமிழகத்திலுள்ள கூட்டணித் தலைவர்கள், போராளிகள் குழுக்களின் தலைவர்களைச் சந்தித்துப் பேசவுள்ளனர். (பி)

## கடற்படை தாக்கியது

(திருகோணமலை)

திருமலை தபால் அலுவலகத்துக்கு முன்பாக நின்ற பலர் அங்கு ட்ரக்கில் திடீரென வந்த கடற்படையினரால் தாக்கப்பட்டுப் படுகாயத்துக்

(5ம் பக்கம் பார்க்க)

அரசு அறிவிப்பு:

## சரணடைந்தால் பாதுகாப்பு

(கொழும்பு)

''இருதீவிரவாதக் குழுக்களுக்கிடையே ஏற்பட்டுள்ள கோஷ்டிச் சண்டையில் தமது உயிருக்கு ஆபத்தை எதிர்நோக்கும் தீவிரவாதிகள் சரணடைந்தால் பாதுகாப்பு அளிக்கப்படும்'' என்று அரசு அறிவித்துள்ளது.

இவர்கள் வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு அண்மையிலுள்ள இணைப்புத் தலைமை அலுவலகங்கள், ராணுவமுகாம்கள், பாதுகாப்புப் படைப் பிரிவு

(5ம் பக்கம் பார்க்க)

எந்த ஓர் இனமும்

## இன்றைய அரசை தனது கருவியாக்கமுடியாது

### ஜனாதிபதி மேதினச் செய்தி

(கொழும்பு)

''இன்றைய ஜனநாயக அரசாங்கத்தை எந்த ஓர் இனமும் தனது கருவியாக்க முடியாது'' என்று ஜனாதிபதி ஜே. ஆர் ஜயவர்த்தன தமது மேதினச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தமது செய்தியில் கூறியிருப்பதாவது;

''எல்லா இலங்கையர்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரே ஓர் அரசுதான் இந்த நாட்டில் ஆட்சி செய்யமுடியும்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட எமது வளங்களின் அழிவு பாதுகாக்கப்படவேண்டும் நாடு மீண்டும் சீரான வளர்ச்சிப்பாதையில் துரிதமாகச் செல்ல வேண்டியுள்ளது.

வளர்ச்சிப்பாதை என்பது தீவின் சகலபகுதிகளுக்கும் அதாவது: வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு ஆகிய பிரதேசங்களுக்கும் நாட்டுமக்கள் அனைவரும் எவ்வித தடையுமின்றி சுயமாகவும், பாதுகாப்பாகவும் போய்வரும் நிலைமை உருவாக வேண்டும் எனக் குறிப்பிட விரும்புகிறேன்'' என்றார். (கி-ய)

ஹட்டனில்

## கம்யூ: மேதின அலங்காரம் பொலிசார் களைத்தனர்

### 'வடக்கில் இது நடக்குமா' — சரத்

(ஹட்டனிலிருந்து நமது நிருபர்)

இலங்கை கம்யூனிஸ்ட்கட்சியின் செங்கொடிச்சங்கத்தன் மேதின விழாவையொட்டி கொட்டகலப்பகுதியில் நேற்று முன்தினம் இரவு அலங்கரிக்கப் பட்டிருந்த செங்கொடிகளும், வாழைதோரணங்களும் இரவோடிரவாகப் பொலிசாரினல் அகற்றப்பட்டன.

(5ம் பக்கம் பார்க்க)

உரிமைகளைப் பெற

## தமிழர்கள் ஒன்றுதிரண்டு போராடவேண்டும்

### சுன்னாகம் மே தினக் கூட்டத்தில் வலியுறுத்து

(ஐ. சண்முகலிங்கம்)

''மிகவும் கேவலமாகவும், கீழ்த்தரமாகவும் சுரண்டப் பட்டுவந்த தொழிலாளர்கள் ஒன்றுதிரண்டு பேராடியதன் மூலம் 1986-ம் ஆண்டு மே முதலாந் திகதி தமது உரிமைகளை வென்றெடுத்தார்கள் இதபோன்று மிகவும் கொடுமையான முறையில் தாக்கப் பட்டுக்கொண்டிருக்கிற தமிழ் மக்களும் ஒன்றுதிரண்டு தமது உரிமைகளுக்காக இன்றைய அரசுக்கெதிராகப் போராட வேண்டும்.''

இவ்வாறு வடபிரதேச தொழிற்சங்கங்களும், வெகுஜன அமைப்புகளும் இணைந்து நடாத்திய ஐக்கிய மேதினக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசும்போது கூட்டுக் குழுத்தலைவர் திரு. எஸ். விஜயான தன் குறிப்பிட்டார்.

சுன்னாகம் பஸ் நிலையத்தில் இச்கூட்டம் நடைபெற்றது.

இணுவில் கந்தசுவாமி கோவில முன்றலில் நேற்றுக் காலை வடபிரதேச தொழிற் சங்கங்களும், வெகுஜன அமைப்புக்களும இணைந்து ஐக்கிய மேதின ஊர்வலத்தை ஆரம்பித்து வைத்தன. கூட்டுக்குழுத் தலைவர் விஜயானந்தன், தொழிற்சங்கத்தலைவர்களான ஏ சி. இக்பா , வி. அண்ணாமலை, ஆர்- தவராசா, என். நவரத்தினம் ஆகியோர் தலைமையில் ஊர்வலம் நடைபெற்றது இணுவில் கந்த

(5ம் பக்கம் பார்க்க)

# நகரிலிருந்து கைதடிக்கு அப்பால் எந்த வாகனமும் இன்று செல்லாது

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரிலிருந்து கைதடிக்கு அப்பால் இன்று பஸ்கள் உட்பட எவ்வித வாகனப் போக்குவரத்தும் நடைபெறமாட்டாது. நேற்றும் வாகனப் போக்குவரத்து கைதடிக்கு அப்பால் நடைபெறவில்லை.

இளைஞர் இயக்கமொன்றின் எச்சரிக்கையைத் தொடர்ந்தே இவ்வாறு வாகனப்போக்குவரத்துத் தடையேற்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

நேற்று யாழ். நகரிலிருந்து வ. பி. போ. பஸ் உட்பட மினிபஸ்கள், லொறிகள், கார்கள் மற்றும் எந்தவாகனங்களும் கைதடிக்கு அப்பால்செல்லவில்லை. மினிபஸ்கள், லொறிகள், கார்கள் மற்றும் எந்த வாகனங்களும் நேற்றுக்

(5ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

புரொய்லர் கோழி விற்பனைக்குண்டு. கிலோ 35/- ஆ சிவராசா, 6/2, கன்னாதிட்டி ஒழுங்கை, யாழ்ப்பாணம். [C-2085]

'அல்சேஷன்' நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும்: 96, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். [C-2090]

Sony கலர் "T. V. 14" (With Remote Controler) உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ளும் முகவரி: S. Rajah, "சரஸ்தான்", உடுவில் வீதி, மானிப்பாய். (C-2089)

## தவறிவிட்டது

திரு. செ. வசந்தராஜா, மடம் வீதி, குருநகர், யாழ்ப்பாணம் என்பவருடைய அடையாள அட்டை 28-4-86ல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 769 தனியார் மினி பஸ்ஸில் கொடுக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும் [C-2087]

இல. 650852435 V. சிங்கராசா யேசுதாசன் (ராஜன்) மாரிசன்கூடல், இளவாலை என்பவருடைய அடையாள அட்டை 30-04-86 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட விலசத்தில் ஒப்படைத்தால் தகுந்த ச மானம் வழங்கப்படும். [C-2092]

## திறப்பு விழா

மக்கள் பிரசுராலயம் — யாழ். கிளை

இன்று வரை 40, சிவன் கோவில் வடக்கு வீதி, யாழப்பாணத்தில் இயங்கிவந்த எமது விற்பனை நிலையம் 05-05-1986 (திங்கள்) இருந்து இலுப்பையடிச் சந்திக்கு அருகாமையிலுள்ள 15/1, பலாலி வீதியில் அமைந்துள்ள புதிய மனையில் இயங்கும்.

அன்றைய தினம் காலை 9-00 மணிக்கு திறப்பு விழா இடம்பெறும்.

மலிவு விலையில் புததகங்கள் விற்பன செய்யப்படும்.

அனைவரும் வருக!

நிர்வாகி,
**மக்கள் பிரசுராலயம்,**
யாழ். கிளை. [A-467]

## சினிமா ரசிகர்களுக்கு ஓர் மகிழ்ச்சிகரமான செய்தி

இன்று முதல் மணிக்கூட்டு வீதியில் 56-A இலக்கத்திலுள்ள (வெலிங்டன் சந்திக்கு அருகாமையில்) லிபேர்ட்டி சினிமாவை ஈழத்தில் வீட்டிற்கு வீடாகச் சென்று தரமான பொருள்களை விநியோகித்து நற்பெயரைப் பெற்றுள்ள ரொப்லர் இன்ரநஷனல் நிறுவனத்தினால் நி வகிக்கப்படும் என்பதனையும், குடும்பத்துடன் ஒன்றாக இருந்து பார்க்கக்கூடிய தரமான படங்களை நாம் வெளிநாட்டிலிருந்து நேரடியாகவே இறக்குமதி செய்து வெளியிட உள்ளோம் என்பதனையும் மகிழ்ச்சிகரமாகத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

குறிப்பு: பெண்களுக்கு விசேட ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

**ரொப்லர் இன்ரநஷனல்,**
இல. 95, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். (A-469)

## விக்னு டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி ரேட்,
யாழ்ப்பாணம்.

[வடமாகாணத்தில் கலை, வர்த்தக, வகுப்புக்களுக்கு தனித்துவம் பெற்ற ஒரேயொரு நிறுவனம்.]

**A/L 88 புதிய பிரிவு 2**

**ஆரம்பம்:- 04-05-1986**

நேரம்: பிற்பகல் 1-00 மணி.

மு. குறிப்பு:
4-ம் திகதிக்கு முன்னர் உங்கள் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

[A-465]

## கல்வி

A/L 87-88 கலை / வர்த்தக வகுப்புக்கள் பிரிவு 'B' ஆரம்பம் 07-05-1986. Modern Education Centre, Karaveddy. [C1845]

## 1-வது பிறந்ததின வாழ்த்து



### செல்வன் வாகீசன்

நாரந்தனைக் கந்தசுவாமி கோயிலடி குணம் (சண்முகலிங்கம்) பிரேமாவதி தம்பதிகளின் அருமைப் புதல்வன் வாகீசன் 01-05-86ல் தனது முதலாவது பிறந்த தினத்தைக் குமரன் ஆலயத்திலும் இல்லத்திலும் கொண்டாடினர். அவரை அப்பா, அம்மா, தாத்தாமார், அம்மப்பா, அம்மம்மா, பெரிய அம்மப்பா, பெரியஅம்மம்மா, சிவா மாமா குடும்பத்தினர், சித்தப்பா (செல்வம்) குடும்பத்தினர், ஜேர்மன் சித்தப்பாமார், ஜெகன் சித்தப்பா, ஜேர்மன் சந்திரன் அண்ணா, பெரியப்பாமார் குடும்பம், அப்பப்பா, மலர்அத்தை, செல்வி ஜயந்தா, கலா, சுகுணா அன்ரிமார், அயலவர், உற்றார் அனைவரும் குமரன் அருள் பெற்று நீடூழி வாழ்க வென வாழ்த்துகிறார்கள். [C-2091]

## ஓராண்டு நினைவஞ்சலி



### திருமதி குணமணி தாமோதரம்பிள்ளை

தாயின் அணைப்பில்: 19-02-1927
இறைவன் பிணைப்பில்: 13-04-1985
திதி: 02-05-1986 வெள்ளிக்கிழமை.

எங்கள் குடும்பத்தின் தலைவியாய், வழிகாட்டியாய், ஒளிவிளக்காய் அன்புடனும், பண்புடனும், பாசத்துடனும் வாழ்ந்து எம்மை வாழ வைத்த தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

இங்ஙனம்
மகள்கள், மகன்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
அல்வாய் வடக்கு,
அல்வாய். (C 2068)

## 'நீண்டவாழ்விற்குவிளையாட்டு பயிற்சி அவசியம்'

[சாவகச்சேரி]

"சன சமூக நிலையங்கள் மட்டத்தில் இல்ல விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதனூடாக மக்களை ஐக்கியப்படுத்த முடியும்" என்று கைதடி நவபுரம் நவ சன சமூக நிலையத்தால் நடத்தப்பட்ட இல்ல விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டு உரையாற்றிய ச. தங்கராஜா கூறினார்.

"உடல் நலத்துடன் நீண்ட வாழ்வு வாழ விளையாட்டுப் பயிற்சிகள் அவசியம். ஆகவே ஒவ்வொரு மனிதனும் காலை எழுந்தவுடன் குறைந்தது ஐந்து நிமிடமேனும் விளையாட்டு பயிற்சியில் ஈடுபட வேண்டும்" என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

சின்னத்தம்பி இல்லம். நடேசன் இல்லம், மார்க்கண்டு இல்லம் ஆகியவற்றிற்கிடையே நடைபெற்ற போட்டிகளில் சின்னத்தம்பி இல்லம் முதலாமிடத்தைப் பெற்றது.

சிறந்த விளையாட்டு வீரராக இ. சதானந்தனும் சிறந்த வீராங்கனையாக சி. சரோஜினியும் தெரிவானார்கள். [து]

## புங்குடுதீவு பாணாவிடைசிவன் தேர் இன்று

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு பாணாவிடை சிவன் கோவில் தேர்த் திருவிழா இன்று வெள்ளிக்கிமை காலை நடைபெறவுள்ளது.

ஆலயத்தின் மகோற்சவங்கள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பூங்காவனத் திருவிழாவுடன் நிறைவுபெறும்.

## அப்பர்சுவாமிகள் குருபூசை

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத்திருமுறை மன்றத்தினர் நாளை சனிக்கிழமை மாலை நல்லூர் பண்டாரக்குளம் மருதவ வு அருள் மிகு ஸ்ரீ விநாயகா ஆலயத்தில் திருநாவுக்கரசு நாயனார் குருபூசைவிழாவை கொண்டாடவுள்ளனர்.

திருநாவுக்கரசு நாயனாருக்கு விஷேடபூசை, சொற்பொழிவு, திருமுறைப்பண்ணிசை ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறும்.

## மட்டக்களப்புப் பல்கலைக்கழகக் கல்லூரி மீளத்திறத்தலுக்கான அறிவித்தல்

எதிர்வரும் 12 - 05 - 1986 அன்று மட்டக்களப்புப் பல்கலைக்கழகக் கல்லூரி மீளத்திறக்கப்படும் என இக்கல்லூரியில் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து மாணவர்களுக்கும் அறிவிக்கப்படுகின்றது.

அன்றைய தினம் காலை 8-00 மணிக்கு வகுபபுகள் ஆரம்பிக்கப்படும்.

பல்கலைக்கழகக் கல்லூரி விடுதிகளில்தங்குபவர்கள் 11-05 86 பி. ப. 4-00 மணிக்கு முன்பு பல்கலைக்கழகக் கல்லூரிக் காரியாலயத்திற்கு சமுகமளிக்குமாறு கேட்கப்படுவதுடன் இரண்டாந்தவணைக்குரிய வதிவிடக் கட்டணங்கள் உட்பட வேறு ஏதும் நிலுவைகள் இருப்பின் அவற்றுக்கான வங்கிப் பற்றுச்சீட்டையும் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

செயலாளர்

வந்தாறு மூலை,
செங்கலடி. [A-632]

## 2-து ஆண்டு நினைவஞ்சலி

### திருமதி பூலோகநாயகி வரதரத்தினராசா

தோற்றம்: 08-01-1912
மறைவு: 24-04-1984
திதி: 02-05-1986

அம்மா,

நீங்கள் ஆற்றிய இல்லற வாழ்வில் ஒரு பண்புடைத் தாயாய் இலட்சியப் பெண்ணாய் அன்பு விளக்காய் வாழ்ந்ததை எம் நினைவில் என்றும் நாம் மறக்கமாட்டோம். உங்கள் வழியில் எங்கள் குடும்பமும் நீடுழி வாழும் எனப் போற்றுகிறோம்.

புதல்வர், மருகர், பேரர்.
A.V.R. குணசீலன்,
"ஜெயம்",
மயிலிட்டி தெற்கு,
தெல்லிப்பழை. (C 1991)

## 31-வது நாள் நினைவஞ்சலி



### ஓவசியர் கார்த்திகேசு துரையப்பா

தோற்றம்: 13-11-1905
மறைவு: 02-04-1986
திதி: 02-05-1986

ஐயா! எங்களுக்காக வாழ்ந்தீர்கள். எம்மை இமைபோல் காத்தீர்கள். உங்கள் அன்பு, பண்பு, நேர்மை அத்தனையும் எம் இதயத்தில் என்றும் நிலைத்திருக்கும். ஐயாவின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

சாந்தினி (U. K.), ஈசன் (Germany), யஞர்த்தனி (U. K.), C. யோகரூஜன் (U. K.), K, சிறிபாஸ்கரன் (U. K.), ஜிராம், ஜெயராம். சாவித்திரி, குகன், விஜி பேரப்பிள்ளைகள். நந்தியா (U. K.), சிவாஞ்சலி (U. K.) பூட்டப்பிள்ளைகள்.

ஐயாவின் இறுதிக்கிரியைகளில் பங்கு கொண்டும், உதவிகள் பலசெய்தும் அந்தியேட்டியில் பங்குகொண்டு சிறப்பித்தோர்க்கும், அனுதாபச் செய்தி அனுப்பியோர்க்கும் எமது நன்றி.

மனைவி, மக்கள்,
மருமக்கள்.
M.A. சிவலோகநாதன்,
'யஞ அகம்',
திருநெல்வேலி.
(C 2053)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணி வாக்கு

ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டு ஒன்ருகும்.
— ஔவையார்.

## நமது நோக்கு

## அணு ஆலைகளினுல் ஏற்படும் ஆபத்து

சோவியத் யூனியனில் உக்ரேன் மாநிலத்தில் அணு மின்சார நிலையத்தில் ஏற்பட்டுள்ள விபத்திஞல் ஐரோப்பாவிலுள்ள பல நாடுகள் பதற்றமடைந்துள்ளன.

இந்த அணு மின்சார நிலைய விபத்தின் காரணமாக நச்சுவாயுக்களும், அணுக்கதிர்களும் விண்ணில் பரவி சோவியத் யூனியனின் பலபகுதிகளில் மட்டுமன்றி அதன் அண்டை நாடுகள் பலவற்றிலும் கூட படியத் தொடங்கியிருப்பதாக அஞ்சப்படுகிறது.

இதஞல் போலந்து, பின்லாந்து, நோர்வே, சுவீடன் போன்ற நாடுகள்தமது மக்களை கதிரியக்கத் தாக்குதல்களிலிருந்து காப்பாற்றுவதற்கான ஏற்பாடுகளில் இறங்கியுள்ளன.

கடந்த சனிக்கிழமை ஏற்பட்ட இந்த அணுக் கசிவிஞல் சோவியத் யூனியனில் மாத்திரம் 2000 பேர்வரை பலியாகியிருக்கலாம் என மேற்கு நாடுகளில் கருதப்படுகின்றது. ஆனல் அந்த விபத்தில் இருவர்மட்டுமே பலியாகியுள்ளதாக சோவியத் யூனியன் அறிவித்துள்ளது. எனினும் மேற்படி அணுமின் ஆலையிலிருந்து வெளிப்பட்ட நச்சுப்புகையானது அண்டைநாடுகளின் வானப்பிரதேசத்தில் மட்டுமின்றி தூரத்திலுள்ள இங்கிலாந்து வரை பரவியதாகவும் அதல் கதிரியக்கத் தாக்கங்கள் இப் பகுதிகளில் படிந்து பொதுமக்களைப் பாதிக்கக் கூடிய அபாயம் ஏற்பட்டிருப்பதாகவும் கருதப்படுகின்றது.

பொதுமக்களின் உணவுகள் குடிநீர்,மற்றும், பாவனைப்பொருள்களில் அணுக்கதிர்கள் பரவுவதன்காரணமாக அவைகளைப் பயன்படுத்துபவர்கள் மட்டுமன்றி கர்ப்பத்திலுள்ள எதிர்காலச் சந்ததியினரும் கூட பெரிதும் பாதிக்கப்படுவர் என்று அஞ்சப்படுகின்றது.

இந்தியாவில் போபால் நகரில் ஓர் ஆலையில் ஏற்பட்ட நச்சுவாயுக்கசிவிஞல் ஆயிரக்கணக்கான மக்கள் உயிர்துறந்தமை எவர் மனத்தையும் விட்டகலாத அண்மைக்காலச் சம்பவம். அணுப்புகை என்பது இதை விடப் பன்மடங்கு அபாயகரமானது என்பதைமறுக்கவியலாது. இதன்பின் விளைவுகளே மிகப்பயங்கரம். ஹிரோஷிமா, நாகசாக்கி நகரங்களில் வீசப்பட்ட அணுகுண்டுகளின் கதிரியக்கப் பின்விளைவுகள் இன்றும்கூட ஜப்பானியர்களை வருத்தி வருவது கண்கூடு.

வளர்ந்த நாடுகளில், அணுசாதனங்களை சகல துறைகளிலும் பயன்படுத்துவதென்பது ஒரு பாஷனுகிவிட்டது. இந்த 'பாஷன்' வளர்முக நாடுகளையும் இன்று தொற்றிக்கொண்டு வருகின்றது. எரிபொருள் விலையேற்றம் காரணமாக அணுமின்சாதனங்களை போக்குவரத்தில் ஈடுபடுத்துவதற்கும் கூட முயற்சிகள் நடைபெறுகின்றன.

மனித சமுதாயத்தின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் அணுசாதனங்கள் எடுத்துக்காட்டாக அமையலாம். ஆனல்அவைகளினுல் விளையக்கூடிய அனர்த்தங்கள்முழு மனிதஇனத்தையே கருவறுப்பதாய் உள்ளன. எனவே தான் அணுசாதனங்களைப் பயன்படுததும் நாடுகள் மிகுந்த கவனமெடுத்துக்கொள்ளவேண்டும் என வலியுறுத்தப்படுகின்றது.

அணு ஆயுதங்களினுல் விளையும் ஆபத்தைப் போலவே அணு ஆலைகளிலிருந்து ஏற்படக்கூடிய கசிவுகளினுலும் ஆபத்து விளையும் நிலை இருந்துவருகின்றது.

சோவியத்யூனியனில் ஏற்பட்டுள்ள இந்த அணு மின்சாரக் கசிவினை அந்நாடு மிகச்சிறிய சம்பவமாகக்காட்டி சமாளித்துவிட்டபோதிலும், அணுசக்தியையே ராணுவ பொருளாதார வளர்ச்சிக்கு சகல வழிகளிலும் பயன்படுத்தும் இதுபோன்ற ஏனைய நாடுகளும் இன்னும் பலமடங்கு கவனத்துடனும் கண்காணிப்புடனும் இருக்க வேண்டும் என்பதை இச்சம்பவம் சுட்டிக்காட்டுகின்றது.

அணுசக்தியை பயன்படுத்திக்கொள்ள ஆர்வம் கொண்டுள்ள இலங்கை போன்ற பின்தங்கிய நாடுகளுக்கும் இது ஒரு படிப்பினை.

## "பொதுப்பணியில் மாதரின் ஆர்வம் வரவேற்புக்குரியது"

(புங்குடுதீவு)

"பொதுப்பணியில் மாதர்கள் இன்று காட்டும் ஆர்வமும் அக்கறையும் அனைவரையும் பிரமிக்க வைக்கும் அளவுக்கு இருக்கின்றது. இந்த நிலை நிச்சயமாக வரவேற்கப்படவேண்டியதே மாதர் சக்தியும் இளைஞர் சக்தியும் இணைந்து செயற்பட்டால் எதையும் சாதிக்கமுடியும். உலகெங்கும் நடைபெற்ற சுதந்திரப் போராட்டங்களிலும் சமூக சீர்திருத்தப்பணியிலும் மாதர்களின் பங்கு அளப்பரியதாக விருந்ததை வரலாறுகள் காட்டுகின்றன."

ஊரைதீவு மாதர் கழகத்தினரின் தையல் பொருள் காட்சியின்போது பிரதம விருந்தினராகக்கலந்துகொண்டு உரையாற்றிய தமிழர் கலாசாரக் சங்கத் தலைவரான சட்டத்தரணி எஸ். கே. மகேந்திரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கழகத்தலைவி திருமதி சந்திரா கோபால் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திருவாளர்கள் ந இராசதுரை ஆசிரியர் கா. கந்தசாமி அ. நிமலன், செல்விகள் தி. சாரததேவி, ந. அன்பரசி, திருமதி ப. புற்கலை ஆசிரியை உட்படப் பலர் பேசினர். நிலைய ஆசிரியை செல்வி இஜெகா அம்பலவாணர் வரவேற்புரையும் கழகச் செயலாளர் செல்வி து. இராசகுலேஸ்வரி நன்றியும் கூறினர்.

### தடுப்புக்காவலிலுள்ளோர்:

## பெற்ருேர் பார்வையிட அனுமதி மறுப்பு

(மட்டக்களப்பு)

மண்டூரில் இடம் பெற்ற ஆயுதப்படையினரின் தேடுதல் நடவடிக்கையின்போது கைது செய்யப்பட்டு கொண்டை வெட்டுவான் இராணுவமுகாமில் தடுத்துவைக்கப்பட்டிருப்பவர்களைப் பார்வையிடச் சென்ற பற்ருேர், மனைவிமார்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட 56 பேரில் ஏற்கனவே 7 பேர் சுட்டுக்கொல்லப்பட்டதும், அவர்களின் சடலங்களைக் கூடப் பார்க்க பெற்ருேருக்கு அனுமதி மறுக்கப்பட்டதும் தெரிந்ததே.

தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களுள் வாய்பேசமுடியாத ஊமை ஒருவரைத்தவிர மீதி ஏனையோர் பூஸா முகாமுக்கு அனுப்பிவைக்கப்படுவர் என்றும் அங்குபோய் அவர்களைப் பார்வையிடுமாறும் பெற்ருேருக்கும், மனைவிமாருக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளதாம். (மா)

## இலக்கணசுவாமிகள் பற்றி ஞானசம்பந்தம் பத்திரிகை

சுவாமிகள் தம் தாய்நாடாகிய இலங்கையை விட்டு இளமையிலேயே தில்லையம்பதியை அடைந்து ஈசானிய மடம் இராமலிங்க சுவாமிகளினம் சிற்றிலக்கியகளையும் இலக்கண நூல்களையும் முறையே ஐயந்திரிபறச் கற்றுச் சூரியஞர் கோயில் ஆதீனத்தையடைந்து குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமார தேசிக சுவாமிகளைஞானசிரியராகக்கொண்டு கஷாயம் பூண்டு, அருளுபதேசம் பெற்று ஞானநூல்களை எல்லாம் வடமொழியிலும் தென்மொழியிலும் கேட்டுச் சிந்தித்து தெளிந்தவர்கள். தொல்காப்பியமாதி இலக்கண நூல்களிலும் புராணம், இதிகாசம், காவியங்களிலும் இவர்கள் பயிலாதன ஒன்றுமின்று, தம்மையடைந்த அடியார்க்கெல்லாம் அவர்கள் பெற்ற தீக்ஷை நிலைக்கேற்ப ஞானநூற் பொருள் நுணுக்கங்களைப் போதிப்பதே தமதுகுறிக்கோளாகக் கொண்டவர்கள். தமது ஞானசிரியர் விருப்பின்படி சிவஞான போதமாபாடியம் முழுவதும் வெளிவருவதற்குக் காரணமாயிருந்தவர்கள் இவர்களே. அல்லாமலும், ஆதினத்தாபகர் ஸ்ரீலஸ்ரீ சிவாககிரயோகிகள் அருளிச்செய்த சிவாகிர பாடியம், கிரியாதீபிகை என்னும் இரு வடமொழி நூல்களையும் வெளியிட்டு உபகரித்தவர்கள். நித்திய கர்மானுட்டான நெறி சிறிதும் தவருதவர்கள். சிவ பூசாதுரந்தரர். நைட்டிகப் பிரமச்சாரி சுருக்கக்கூறின் துறவறத்திற்கே ஓர் அணிகலஞக விளங்கியவர்கள். பொதுவாக சைவ உலகமும், சிறப்பாக சைவாதீனங்களும் இவர்களை நன்கு அறியும்.

தருமை 24 - வது மகா சந்நிதானத்தின் ஆணையின்படி முத்தி நிச்சயப் பேருரை முழுவதையும் ஒப்பிட்டுப்பார்த்து உபகரிததவர்கள். 25-வது மகா சந்நிதானம் அவர்கள் விருப்பின்படி ஞான விளக்கவுரை பெரும்பகுதி சரி பார்த்தார்கள். ஆகமப்பிரமாணங்களையே மிகுதியும் கொண்டுள்ள இவ்வுரை முழுதும் பார்ப்பதற்கில்லாமை சைவம் செய்த தவக்குறை போலும்.

வெளியே எங்கு சென்ருலும் தில்லையம்பலத்தில் ஆனந்தத் தாண்டவத்தையே கருத்திற்கொண்டவர்களாதலின் தருமையம்பதியிலிருந்து ஞானவரண விளக்கம் உரைபார்த்து வருங்கால்,திருவருள் செலுத்த தில்லையை அடைந்து, தமது நிலையை அன்பர்களுக்கும் சீடர்களுக்கும் குறிப்பாலுணர்த்திச் சிவ சிந்தனை மறவாதிருந்து, தமக்குப்பலவிதத்தும் வசதியாயிருந்த ஸ்ரீ மெய்கண்ட சித்தாந்த வித்தியாசாலையில், விரோதி வருஷம் சித்திரை மாதம் 10ந் திகதி

வெள்ளிக்கிழமை பகல் 10-30 மணிக்குப் பரமுத்தி எய்திஞர்கள். 9ந் திகதி வியாழக்கிழமை இரவு இவர்கள் நிலையைக் குறிப்பாலுணர்ந்த தருமை ஆதீன கர்த்தரவர்கள் அனுப்பி வைத்தருளிய விபூதி, சந்தனம், மாலை முதலிய பிரசாதங்களை ஏற்றிக் காண்ட முறையில் தலையசைத்துவணக்கத்தை தெரிவித்துக் கொண்டார்கள். வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு ஓதுவாமூர்த்தி விடை பெற்றுக்கொண்ட போதும் தலையசைத்து விடையளித்தனுப்பி வைத்தார்கள் என்பதும் சிந்திதற்குரியது. பலகாலமாகவே சுவாமிகளை அறுசுவை உணவளித்து ஆதரித்து வந்த அருட் செல்வரும் பொருட்செல்வருமாகிய உயர் திரு. எஸ். மார்க்கண்டப் பிள்ளையவர்கள் முயற்சியால், தருமை ஆதீன கர்த்தரவர்கள் திருவருள் பெற்று ஆதீனத்திற்குச் சொந்தமான தெற்கு மடத்தில் முத்தி நிச்சயப் பேருரை ஆசிரியரும் ஞானவரணவிளக்கவுரை ஆசிரியருமாகிய பெரியார் வெள்ளியம்பலவாணத் தம்பிரான் சமாதிகொண்டிருக்கும் இடத்திற்குப் பக்கத்தில் இவர்களுக்கும் இடம் கிடைத்தது திருவருட் செயலேயாம்.

சுவாமிகளுக்கு சொந்தமாக ஒரு மடமுப நூல் நிலையமும் உண்டு. ஸ்ரீமத் செப்பறைச் சிதம்பரசுவாமிகளைப் போலவே சகல சைவர்களுக்கும் பயன்படும்படி தக்க பாதுகாப்பாளர்களை நியமித்தும் எழுதியும் வைத்திருக்கிருர்கள்.

பத்காநள் மகேசுவர பூசை வெகுசிறப்பாக நடைபெற்றது தருமையாதீனத்திலிருந்து விபூதி முதலிய பிரசாதம் அனுப்பி வைத்தருளிஞர்கள். வேளூர் கட்டளை விசாரணை ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தலைமையில் சூரியஞர் கோவில் மீஞட்சிசுந்தர தேசிகர், செப்பறைக் குருக்கள் ஐயா, சிவக்கவிமணி சி. கே. சுப்பிரமணியமுதலியார் முதலிய மெய்யன்பர்களும் சுவாமிகளது அருமை பெருமைகளைப் பாராட்டிப் பேசி நடராசப் பெருமான் திருவருளை எழுத்திஞர்கள்.

## "யாழ். மாவட்டம் கல்வியில் சிறந்தது என்பதை நிலைநிறுத்துங்கள்"

(மானிப்பாய்)

'யாழ். மாவட்டம் கல்வியில் சிறந்தது என்பதை நிலைநிறுத்துங்கள்' என யாழ் பிரதேசக்கல்விப் பணிப்பாளர் திரு இ. சுந்தரலிங்கம் ஆசிரியர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

இணுவில் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் சென்ற செவ்வாய்க்கிழமை காலை நடைபெற்ற மானிப்பாய் கல்வி வட்டார அதிபர், ஆசிரியர்கள் ஆகியோர் கலந்துகொண்ட கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்படி வேண்டுகோள் விடுத்தார்.

மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. சதனஞ்செயன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. சுந்தரலிங்கம் மேலும் பேசுகையில் "கல்வி சம்பந்தமாக ஆசிரியர்கள் தமது இல்லங்களிலும் சிந்திக்கவேண்டும். அப்போது புதியசிந்தனைகளை மாணவர்கள் மத்தியிலும் தோற்றுவிக்கக் கூடியதாயிருக்கும். ஆசிரியர் மத்தியில் பரஸ்பர நல்லுறவு இருக்க வேண்டும். அப்போதுதான் மாணவர் முழுமையான கல்வியைப் பெறவாய்ப்பு ஏற்படும்" என்ருர்.

கவின்கலை வட்டாரக்கல்வி அதிகாரி திரு ஆ. தம்பித்துரை பேசுகையில் மாணவர்கள் உற்சாகப்படுத்தப்பட வேண்டுமென்றும்இதன் மூலம் அவர்களதுபலவித திறமைகளை வெளிக்கொணடுவர முடியுமென்றும் கூறிஞர்.

விஞ்ஞான பாடக்கல்வி அதிகாரி திரு எஸ். நடராஜா, தொழில் நுட்ப கல்விஅதிகாரி திரு. க. சுபபிரமணியம், வர்த்தகபிரிவு கல்விஅதிகாரி திரு, எஸ். சிவராஜா, விளையாட்டுத்துறை கல்வி அதிகாரி திரு, வி. தங்கராஜா ஆகியோரும் உரைநிகழ்த்தினர்.

## செல்வா நினைவுதினக் கூட்டம்

[யாழ்ப்பாணம்]

தந்தை செல்வா நினைவு தினக் கூட்டம் எதிர்வரும் 3ம் திகதி சனியன்று காலை தெல்லிப்பழை ப. நோ. கூ. ச. மண்டபத்தில் சங்கத்தலைவர் சி சிவமகாராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் நடைபெறும் நிகழ்ச்சிகளில் பேராசிரியர் வ. ஆறுமுகம் பேராசிரியர் சி க. சிற்றம்பலம் ஆகியோர் தந்தை செல்வா நினைவுப்பேருரைகளை நிகழ்த்துவார்கள்.

## மீன் வியாபாரி பலி

யாழ்ப்பாணம்]

மீன்வியாபாரம் செய்யும் ஒருவர் பலாலி வீதி வழியாகச் சைக்கிளிற் சென்றுகொண்டிருந்தபொழுது பலாலி இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாஞர்.

இருதினங்களுக்குமுன் இச்சம்பவம் இடம்பெற்றது சில்லாலையைச் சேர்ந்த அ. செபமாலை [ரவீந்திரன் 27 வயது] என்பவரே பலியானவராவார். (மா)

## பயிற்சி வகுப்பு

[உடுவில்]

உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலையில் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்ட சாரணர், குருளைச்சாரணர் பிரிவுகளுக்கான தகுதிகாண் சின்னத்துக்குரிய சாரணர் பயிற்சி வகுப்புக்களும் பரீட்சைகளும் நடத்தப்பட்டன. காங்கேசன்துறை மாவட்டச் சாரணர் சங்கத்தினர் இதனை நடாத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகச் செய்திகள்

## சோவியத் அணுநிலைய விபத்து: ஸ்கன்டிநேவியா, ஐரோப்பாவில்

# தொடர்ந்து பீதி நிலவுகிறது!

### கர்ப்பிணிகள், விவசாயிகளுக்கு எச்சரிக்கை

மாஸ்கோ, மே 1'

**சோவியத் யூனியனின் 'உக்ரேயின்' மாநிலத்தில் இடம்பெற்ற அனல் மின்சார நிலையவிபத்து ஸ்கன்டிநேவிய, ஐரோப்பிய நாடுகளைப் பெரும் பீதிக்குள்ளாக்கியுள்ளது. நோர்வே, சுவீடன், பின்லாந்து ஆகியநாடுகள் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து உணவுப் பண்டங்களை இறக்குமதி செய்வதைத் தடைசெய்துள்ளன. ஆஸ்திரியா, மே.ஜெர்மனி, யூகோஸ்லாவியா, போலந்து, சுவிட்சர்லாந்து ஆகியநாடுகள் சோவியத் கதிரியக்க நடவடிக்கைகளை விரிவுபடுத்தியுள்ளன.**

நோர்வே, சுவீடன் ஆகிய ஸ்கன்டிநேவியன் நாடுகளில் கர்பிணிகள், மாணவர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் ஆகியோர் பெரும் அச்சத்துக்குள்ளாகியுள்ளனர்.

இந்த நாடுகளிலுள்ள சூழல் பாதுகாப்பு மையங்களில் ஆயிரத்துக்கு மேற்பட்ட தொலைபேசி அழைப்புகள். கதிரியக்க நிலைமைபற்றி கேள்விகள் எழுப்பி வருகின்றன. கர்ப்பிணிப் பெண்களே இத்தகைய தொலைபேசி தகவல்களை அதிகளவில் கேட்டுத் தெரிந்து வருகின்றனர்.

ஸ்கன்டிநேவியன் நாடுகள் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து வரும் உணவுப்பண்டங்களை தடைசெய்துள்ளன. தகுந்த பரிசோதனைகளின் பின்னரே அவற்றை அனுமதிப்பதென அவை முடிவுசெய்துள்ளன.

இதேவேளை போலந்து அதன் விவசாயிகளை பலமாக எச்சரித்துள்ளது. மேய்ச்சல் தரைகளில் கால்நடைகளை மேயவிடுவது குறித்தும், பசும்புல் தரைகளை பராமரிப்பது குறித்தும் எச்சரிக்கையுடனிருக்குபபடி போலந்து விவசாயிகள் கேட்கப்பட்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை ஏற்பட்ட உக்ரேயின் மாநிலஅணுசக்தி கதிரியக்கவாயு மண்டலம் தற்போது தென்ஐரோப்பியா நோக்கி நகருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் மே.ஜெர்மனி, சுவிர்சர்லாந்து, ஆஸ்திரியா, யூகோஸ்லாவியா ஆகிய நாடுகள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துள்ளன.

அமெரிக்க விஞ்ஞானிகள் இந்த சோவியத் அணுசக்தி நிலைய விபத்துக் குறித்து தொடர்ந்து ஆராச்சிகளைமேற்கொண்டு வருகின்றனர். செய்மதிமூலமாக இதுபற்றிய தகவல்களை அவர்கள் பெற்று வருகின்றனர்.

பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கிரெட்தட்சர், சோவியத் யூனியன் இந்த விபத்துக் குறித்து தாமதமாக அறிவித்திருப்பதைக் கண்டித்துள்ளார். (கி)

## இருவர்மட்டுமே மரணம் 200 பேருக்கு சிகிச்சை! சோவியத்தகவல்

மாஸ்கோ, மே1, உக்ரேயினில் நிகழ்ந்தஅணுசக்திநிலைய விபத்தில் இருவர் மட்டும்ம கொல்லப்பட்டுள்ளதாக சோவியத்யூனியன் அறிவித்துள்ளது.

இவ்விபதத்தில் 200 பேர்பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும், வைத்தியசிகிச்சைகளின் பின்னர் இவர்களில் 50 பேர் வைத்தியசாலைகளிலிருந்து வெளியேறியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கத்திய செய்திஸ்தாபனங்கள் மேற்படி விபத்தினால் ஏற்பட்ட கதிரியக்கத்தினால் ஆயிரக்கணக்கானவர்கள் மரணமாகியிருக்கலாம் என்று தெரிவித்திருந்தன. ஆனால் சோவியத்யூனியன் இதனை மறுத்திருப்பதுடன், இத்தகைய ஆதாரமற்ற தகவல் வெளியிடப்பட்டுள்ளதையிட்டுக் கண்டனம் தெரிவித்துள்ளது. உக்ரேயின் மாநிலத்துக்கானஐ. நா. பிரதிநிதி ஐ.நா. சபையிலும் இத்தவறான தகவல் குறித்து கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கதிரியக்க வெளியேற்றம் கணிசமாக இருப்பதை சோவியத் ஒப்புக்கொண்டுள்ளது. ஆயினும் சோவியத்திலுள்ள நதிகள், நீர்நிலையங்கள் என்பனவற்றுக்குப் பாதுகாப்பளிக்கப்பட்டுள்ளதென சோவியத் தெரிவித்துள்ளது. [கி]

ஊர்காவல் படையினர்

## கைது செய்தவர்களை ராணுவம் விடுவித்தது

[வவனியா]

கடந்த ஞாயிற்றுக்கிழமை பெரியபுளியாலங்குளம் தமிழ் கிராமத்திற்குள் புகுந்தஉலுக்குளம் ஊர்காவல் படையினர் தகப்பன் மகன் உட்பட நால்வரைக் கைதுசெய்துகொண்டு சென்றனர்.

தம்பையா கனகசிங்கம் [வயது 50], கனகசிங்கம் ஜெகதீஸ்வரன் [வயது 17], கனகசிங்கம் விமலேஸ்வரன் (16 வயது) கு. ரகுநாதன் [25 வயது] ஆகிய இந்த நால்வரும் அவர்களது உறவினர்கள் அழுது புலம்பி செட்டிக்குளம் இராணுவத்தினரிடம் முறையிட்டதைத் தொடர்ந்து உடனடியாக இராணுவத்தினர் நடவடிக்கையில் இறங்கியதன் பயனாக விடுவிக்கப்பட்டனர்.

# பொற்கோயிலுக்குள் மீண்டும் படைகள் ஊடுருவல்

அமிர்தஸரஸ், மே 1 1984ம் ஆண்டுஜூன் மாதம் அமிர்தஸரஸ் பொற்கோயிலுக்குள் இந்தியத்துருப்புக்கள நுழைந்ததன் பின்னர் இரண்டாவது தடவையாக பஞ்சாப் பொலிஸாரும், மத்திய ரிசேர்வ் பொலிஸ் படையினரும் நேற்றுமுன்தினம் அக்கோயிலுக்குள் நுழைந்தனர்.

இந்த பாதுகாப்பு நடவடிக்கையின்போது 3 பேர் காயமடைந்தனர் 100 பேர் வரை கைதுசெய்யப்பட்டனர்.

'காலிஸ்தான்' தனிநாடு பிரகடனத்தப்பட்டு விட்டதாக பொற்கோயிலுக்குள்ளிருந்த 'அன்டி கமிட்டி' என்ற தீவிரவாத சீக்கியக் குழு அறிவித்திருந்தது. இதனைத் தொடர்ந்தே இக்கோயிலுக்குள் பஞ்சாப் மாநில அரசு பாதுகாப்புப்படைகளை அனுப்பியிருந்தது.

இந்த நடவடிக்கையின் போது 'அன்டி கமிட்டி' குழுவினர் தப்பிச் சென்று விட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. இக்குழுவில் 5பேர் இடம் பெற்றிருந்தனர்.

இவர்களின் ஆதரவாளர்களான பொற்கோயில் தீர்த்தக்கேணியைச் சூழவிருந்த சீக்கியர்களே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மே. வங்காளம், ஆந்திரா, ஹிமார்சல் பிரதேஷ் மாநில அரசுகள் இந்த பொற்கோயில் முற்றுகை நடவடிக்கையை வரவேற்றுள்ளன.

நேற்று மாலை பொற்கோயிலுக்குள் பாதுகாப்புப்படைகள் புகுந்தன. துப்பாக்கிவேட்டுக்கள் பலமாகஇருக்கவில்லை. 5மணி நேர நடவடிக்கையின் பின்னர் அக்கோயிலை அப்படைகள் தமது பூரணகட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தன. [கி]

## கொள்ளை

[சுண்டுச்குளி]

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையில் நேற்று முன்தினம் 176 54 ரூபா பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது.

இரு மோட்டார் சைக்கிள்களில் வந்த நால்வரில் இருவர் ஆயுதத்துடன் கணக்காளர் அறையினுள் புகுந்து அங்கு கடமையில் இருந்த கணக்காளர் செல்வி. எஸ் சோமசுந்தரத்திடம் ஒரு தொகைப் பணம் அங்கு இருப்பதாகவும் அதனைத்தரும்படியும் கேட்டார்களாம். அவ்வளவு பணம் தம்மிடம் இல்லையெனக் கூறவே அவரது மேசைலாச்சியில் இருந்த 176,54 ரூபா பணம் இவர்களா எடுத்துச் செல்லப்பட்டதாம்.

இப்பணம் முழுவதும் இத்திணைக்களத்திடமிருந்து கடன் பெற்றவர்களிடம் மீளப் பெற்ற பணம் எனவும் இக்கொள்ளையினால் புதிய விண்ணப்பங்களுக்கு உடன் கடன் வழங்க முடியாதிருப்பதாகவும் ஓர் அதிகாரி தெரிவித்தார்.

## திறப்புவிழா

[யாழ்ப்பாணம்]

தெல்லிப்பளை பல நோக்குக் கூட்டுயவுச் சங்க புதிய விற்பனை நிலையத் திறப்புவிழா எதிர்வரும் 4ம் திகதி ஞாயிறன்று காலை மயிலிட்டி திருப்பூர் ஒன்றியத்தில், தெல்லிப்பழை ப. நோ. கூ. ச. தலைவர் சி. சிவமகாராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

## புதிய உபவிதிகள் தயாரிக்கும்பணி

[சாவகச்சேரி]

கைதடி வடக்கு கயிற்ற சிட்டி அம்மன் கோவில் தர்மகர்த்தா சபையின் உப விதிகள் தொடர்பாக நிலவிவந்த முரண்பாடுகளைத் தீர்க்கும் பொருட்டு ஆலயத்திற்கான புதிய உபவிதிகளைத் தயாரிக்கும் பணி மிக விரைவில் நடைபெறவுள்ளது.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஆலய பொதுச்சபைக் கூட்டத்தின்போது இம்முடிவு மேற்கொள்ளப் பட்டதாகும்.

சாவகச்சேரி சமாதானசபையின் மேன் முறையீட்டுத் தலைவர் பண்டிதர். இ. சிவலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் பங்குகொண்டனர்.

அறுவர் கொண்ட புதிய கமிட்டி உப விதிகளைத் தயாரிக்க வேண்டிய நடவடிக்கையை மேற்கொள்கின்றது.

## இன்றைய பலன்

மாதம்- சித்திரை
திகதி- 19[1986-5-2]
கிழமை- வெள்ளி
திதி- நவமி பி.இ வரை
நட்சத்திரம்- அவிட்டம் பி.இ.வரை

மேடம்: சிந்தனை அலைகள் சிறிப்பாயும். எதற்கெடுத்தாலும் ஆத்திரப்படுவீர்கள். சகோதரததின் உடல்நிலை பாதிக்கற்படலாம்.

இடபம்: அதிக ஆர்வம்ஆராய்ச்சிகளில் தோன்றும். வாகனத்தின்மூலம் பொருள் வரவிற்குமிடமுண்டு. வியாபார முன்னேற்றமுண்டு.

மிதுனம்: வாழ்க்கையில் புதிய பாதையை உருவாக்குவீர்கள். உங்கள் அறிவுரைகளைக் கேட்பதற்கு மற்றவர்கள் தயாராக இருப்பார்கள். பரோபகாரச் சிந்தை மேலிடும்.

கடகம்: பகைமூட்டம் வட்டமிடும். வீணான வார்த்தைகளால் மனம் புண்படும். தொழில் துறையில் முட்டுக்கட்டைகள் தோன்றக்கூடும்.

சிங்கம்: மனம் நிறைந்த சம்பவங்கள் இடம்பெறும். பெரியோர்களின் ஆசிதாராளமாகக்கிடைக்கும். கைவிடப்பட்ட பணவரவு மீண்டும் கிடைக்கும்.

கன்னி: எதிலும் தயக்கநிலை தென்படும். நண்பர்களும் குறைகூறுவர். பொருளாதாரத்துறையில் மந்தநிலை தென்படும். வாய்வுரோகங்களுக்கும் இடமுண்டு.

துலாம்: பொன்னான சந்தர்ப்பம் இன்று கிடைக்கும். திறமைக்கு முதலிடம் உண்டு. பெரியவர்களின் ஆதரவிற்கும் இடமுண்டு.

விருச்சிகம்: இனத்தவர்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். நீண்டநாள் பயணம் குறித்து திட்டமிடப்படலாம். புகழ்தரும் காரியங்களில் ஈடுபடுவீர்.

தனுசு: மக்கள் மூலம் மகிழ்ச்சியுண்டு. பிரமுகர்கள் தேடி வருவார்கள். பொதுப்பணிகளில் ஆர்வம் ஏற்படும்.

மகரம்: குறுக்குவழித் தலையீடு தொந்தரவை உண்டு பண்ணும். கழுகுப்பார்வை வட்டமிடும். நிதி நெருக்கடியைத் தவிர்க்க மதிவழிநில்.

கும்பம்: குடும்பத்தில் அமைதி குன்றும். நன்றாக ஆலோசித்த பின்பே எக்கருமமும் செய்யவேண்டும். புதிய முதலீட்டைத் தவிர்க்கவும்.

மீனம்: குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும். உறவினர் ஒருவரின் வருகை உற்சாகத்தையளிக்கும். அடக்கம் நன்று.

**திருமலை**
**வே. ரவீந்திரன்**

## இலங்கைக் கடலுள் நுழையும் கப்பல்களுக்கு கடும் விதிமுறைகள் அமுல்

(கொழும்பு)

இலங்கை வெளிவிவகார அமைச்சு நேற்றுமுதல் இலங்கையின் கடற்பரப்பினுள் நுழையும் கப்பல்களுக்குக் கடுமையான விதிமுறைகள் அமுல்படுத்தப்படவுள்ளதாக இலங்கையிலுள்ள தூதராலயங்களுக்கு அறிவித்துள்ளது. இவ்விதிமுறைகள் கடைப்பிடிக்கப்படாவிடின் அதனால் ஏற்படும் சேதங்களுக்குத் தாம் பொறுப்பில்லை எனவும் அமைச்சு அறிவித்துள்ளது.

இது சம்பந்தமாக இலங்கை வெளிவிவகார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளஅறிக்கையொன்றில் "இலங்கையின் நீர்ப்பரப்பினுள் எந்தவொரு கப்பலினதும் தலைவர், இலங்கையின் கரையோரப்பாதுகாப்புக்குப்பொறுப்பாகவுள்ள படகுகளினால் அல்லது விமானங்களினால் வழிமறிக்கப்படும் போது தனதுகப்பலை வானொலி மூலம் இனங்காட்டிக் கொள்ள வேண்டும். அத்துடன் இலங்கைக்கடற்படைத் தளபதியின் உத்தரவுடன் பாக்குநீரிணையில் இலங்கை எல்லையினுள் பயணம் செய்யும் கப்பல்கள், இலங்கையின் கடல் பகுதியில் பிரவேசிக்கலாம் அல்லது தங்கியிருக்கலாம்.

கொழும்பு, திருமலை, காலி. காங்கேசன்துறைத்துறைமுகங்களை அடையும் அல்லது வெளியேறும் கப்பல்களுக்கும் இவ்விதிகள் பொருந்தும்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளன.

(ய-செ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புங்குடுதீவு பாணவிடை சிவன் தேர் இன்று

நம் தமிழர் வாழ்வில் அமைந்த கற்கோவில்களில் வடபால் தீவகங்களில் காலத்தால் மூத்த பழம் பெரும்பதி தான் பாணவிடை தான் தோன்றீஸ்வரன் ஆலயம்.

கர்ணபரம்பரைக் கதைகளாக இவ்வாலயத்தின் அருளாட்சிபற்றி நிறையைப்பேசப் படுகிறது இக்கதைகளை இன்றைய வரலாற்றுக் கண்ணோட்டத்தி எம்மில் பலர் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், வேதங்கள் போலஎன் ம் அழியாத இறைநிகழ்வுகளை பக்தர்களின் உள்ளங்களில் நிறுத்தி நிலையான உதகத்தை நிலையில்லா இவ்வுலகில் காட்கின்ற நிலையானஉவபெருமை இக்கதைகளுக்குண்டு அவற்றுள் ஒனறை மட்டும் காண்போம்.

கடந்த 74 ஆண்டுகளாக அப்பர் குருபூசையினை (திருநாவுக்கரசர்) பெருவிழாவாகக் கொண்டாடும் இவ்வாலயத்தில் மதியம் 12 மணியளயில் ஆரம்பமாகும். அன்னதானம்' அன்று நடுநிசிவரையும் புதிதாக உலைவைக்காது ஆயிரமாயிரம்மக்களுக்குப் படைச்குமளவிற்கு ''அப்பர் சோறு'' அள்ள அள்ளக்குறையாது. இந்நிகழ்ச்சி திருவீழிமழலையில் அப்பர்மடத்து அன்னதானம் நினைவூட்டும்.

இவ்வாலயத்தின் வரலாற்றுக்கண்ணோட்டத்தில் மருதப்பு சுவாமி அமரர் அ. கு. மதியாபரணம், முத்தர் கதிரவேலு, அமரர் ஆ. மாணிக்கம் போன்றோர் ஊரவர்களின் ஒத்துழைப்புடன் ஐயனர் ஆலயம் என வழங்கிவந்த புராண படல மடாலயத்தினை ஆகம அமைவுப்படி சிவன் கோவிலாக்கி பர்வதபத்தினி உடன் உறை இராமலிங்கேஸ்வரர் ஆலயமாக நிறுவினர். புங்கையூர் மக்களின் தெய்வீக வாழ்விற்கு இவ்வாலயம் மையமாகியுள்ளது. இக்காலகட்டத்தில் அப்பர் பெயரால் ஆலய முன்றலில் அமரர் ஆ. மாணிக்கத்தின் பெருமுயற்சியினல் அமரர் வ. பசுபதிப்பிள்ளையவர்கள் திருநாவுக்கரசர் வித்தியாலயத்தை ஆரம்பித்தார். மருதப்பு சுவாமி அவர்களால் ஆரம்பித்துவைக்கப்பட்ட அப்பர் குருபூசை பொதுமக்களின் உதவியுடன் தற்போது வருடம் தோறும் தேர்த்திருவிழவின் மறுநாள் ஆலய அறங்காவலரால் நடாத்தப்படுகின்றது

தெய்வமெய்திய தேவரையாளன் ஒருவனல் இவ்வாலயத்தின்வடபால் கடலிலிருந்து எடுத்துவந்து நாட்டப்பட்ட கையடக்கமான கல்லே இவ்வாலயத்தின் மூலலிங்கம். இவ்விலிங்கம் காலத்தோடு தானும் வளர்ந்துநிற்கின்றது 194 ம் ஆண்டு பரிசீலிக்கப் பட்டபோது இந்த லிங்கம் நிலமட்டத்திலிருந்து கீழ் நோக்கி 6அடி வரைக்குக்கீழும் நிலமட்டத்தின் மேல் 5 அடி வரையும் வளர்ச்சிபெற்றிருந்தது நிலமட்டத்தின்கீழ் வளர்ச்சி மேலும் சென்றுகொண்டிருந்தமையால் ஆயும் காணும் முயற்சியினை அடியார்கள் நிறுத்திக்கொண்டனர். ''தெய்வக்கல்'' இலிங்கமாகி அருளாட்சிசெய்வது இவ்வாலயத்திற்கு தனிச்சிறப்பளிக்கிறது, ஏன்? இந்த இலிங்கத்தினை அன்றிலிருந்து இன்றுவரை நிழல்படுத்திநிற்கும் 'தெய்வமரம்' இனங்காணமுடியாத ஒன்றாகவும்; அம்மரத்தின் பால் இளம் சிவப்பு நிறமாகவும் இருப்பது அடியார்களின் பக்தியை மேலும் வைரமாக்கிறது.

டாக்டர்
ஆ. பேரின்பநாதன்

## லொறியில் கொள்ளை

[வவனியா]

நேற்று முன்தினம் காலை வவனியாவில்இருந்து மன்னர் சென்ற தனியார் லொறியில் பதினேழாயிரம் ரூபா இனந்தெரியாத நபர்களினல் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

மன்னர் வீதியில் கன்னட்டி என்னும் இடத்தில் இக்கொள்ளை இடம்பெற்றுள்ளது. நெல்கொள்வனவுக்காகச் சென்ற இந்த லொறியின் சாரதியும கிளினரும் தாக்கப்பட்டுள்ளனர். [வா]

## நகரிலிருந்து...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கைதடிக்கு அப்பால் செல்லவில்லை. சைக்கிள்கள்மட் டுமே அனுமதிக்கப்பட்டன.

இதேசமயம் கைதடிக்கு வெளியேயிருந்துவரும் வாகனங்கள் நகருக்குள் வருவதற்கு அனுமதிக்கப்பட்டன.

நேற்று இங்கிருந்து தூர இடங்களுக்குப் பயணமான பஸ்கள் உட்படச் சகல வாகனங்களும் திருப்பிவிடப்பட்டன.

இது இவ்வாறிருக்க கடந்த மூன்று தினங்களாகக்கல்வியங்காடு ஊடாக யாழ்ப்பாணத்திலிருந்து கோப்பாய் செல்லும் வீதியில் வாகனப்போக்குவரத்துத் தடைசெய்யப்பட்டுள்ளது. இதனல் சகலவாகனங்களும், கல்வியங்காடு ஊடாகச் செல்லாமல் உருபராய் ஊடாகக் கோப்பாய்ச் சந்திக்குச் செல்கின்றன

## கடற்படை--

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குள்ளானர்கள.

மேலும் அங்குள்ள கடைகளுக்குள் புகுந்த கடற்படையினர், பொருள்களையும், தளபாடங்களையும் அடித்து நொறுக்கிச் சேதப்படுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (மா)

## 'புளட்' அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

''கடந்த 24-4-86 அன்று சிறீலங்கா கடற்படையினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் பலியான தமிழீழ விடுதலை இயக்கத் தோழர்களுக்கு எமது வீரவணக்கத்தைத்தெரிவித்துக்கொள்கிறோம்'' என்று தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், தமிழீழ விடுதலை இயக்கத் (ரெலோ) தலைவருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:- 'விடுதலைப் போராட்டத்தில் இழப்புகள் தவிர்க்கமுடியாதவை ஆனல் இன்றையகால கட்டத்தில் இவ்வாறன இழப்புக்கள் ஜீரணிக்கமுடியாதவை இந்நிலையில் தோழர்களின் இழப்பு என்பது தமிழீழ விடுதலை இயக்கத்திற்கு மட்டும் ஏற்பட்ட இழப்பல்ல. தமிழ்பேசும் சமுதாயத்திற்கு ஏற்பட்ட பேரிழப்பாகவே கருதுகிறோம். போராளிகள் இழப்பில் துயருற்றிருக்கும் தோழர்களின் துன்பத்தில் நாமும் பங்கேற்கிறோம்.''

## உயுமைகளைப்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

சுவாமி கோவிலிருந்து காங்கேசன்துறை வீதிவழியே சுன்னாகம் பஸ் நிலையத்தை ஊர்வலம் அடைந்ததும் மேதினக் கூட்டம் ஆரம்பமானது

கூட்டத்தில் அடுத்துப்பேசிய அரசாங்க லிகிதர்சேவைச் சங்க யாழ். செயலாளர் திரு ஆர் தவராசா, தமது உரையில் 'தமது உரிமைகளுக்காக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட ஊழியர்களை இந்த அரசாங்கம் பழிவாங்கியது. இன்று இன்னும் ஒருபடி மேலே சென்று ஆனசங்காரத்தில் ஈடுபட்டுள்ளது. தமிழ் மக்கள் மீது அரசு நடத்திவரும் அரச பயங்கரவாதத்துக்குத் தமிழ் மக்கள் அடிபணியப் போவதில்லை'' என்றார்.

திரு. ஏ.சி இக்பால் பேசுகையில் ''இந்த அரசு தமிழரை மட்டுமல்ல சிங்கள மக்களையும் டக்கி ஒடுக்கி வருகிறது. இதனுடைய போக்கு இராணுவ ஆசாக மாறவாய்ப்புண்டு'' என்றார்.

ஐக்கியதொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த திரு ஜனகன், பொதுச்சேவைத் தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த திரு. எஸ். நவரத்தினம், திரு. இராசதுரை, திரு ஜீவரத்தினம், திரு. குகதாஸன், திருமதி சரஸ்வதி சபாநாதன் ஆகியோர் உட்படப் பலர் பேசினர்கள்.

மேதினஊர்வலத்தில் கலந்துகொண்டவர்கள் சுலோக அட்டைகளை ஏந்தியவாறு கோஷமிட்டபடி சென்றனர் மூன்று மைல் நீளமான இவ் ஊர்வலத்தில ஏராளமான தொழிலாளர்கள் கலந்துகொண்டனர். [ஐ]

## இன்று நடை--

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கிழமை நடைபெறவுள்ளது. இப்பேச்சுவார்த்தைகளின்போது இனப்பிரச்னைத்தீர்வு குறித்து இந்தியக்குழுவிடம், தமிழர் விடுதலைக் கூட்டணி முன்வைத்த ஆலோசனைகளே பரிசீலிக்கப்படும் என்று அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள்.

இதேவேளை இந்திய உயர்மட்டக்குழு, காணி அபிவிருத்தி மகாவலி அமைச்சர் கிரு. காமினிதிஸாநாயக்கா, எதிர்க்கட்சித்தலைவர் திரு. அநுரா பண்டாரநாயக்கா ஆகியோரை நேற்றுச்சந்தித்துச் சிறிது நேரம் உரையாடியது. குழு இன்று அமைச்சர் திரு. எஸ். தொண்டமானைச் சந்திக்கும் (ய-பி)

# அமெரிக்காவில் இலங்கை இனப் பிரச்னை
## பத்து லட்சம் பேர் ரசித்த விவாதம்

[வாஷிங்டன்]

இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக அமெரிக்க வானெலியில் நேரடி விவாதம் ஒன்று அண்மையில்இடம் பெற்றது.

அமெரிக்காவில் குடியேறிய இருஇலங்கையர் இவ்விவாதத்தில் கலந்துகொண்டனர். காரசாரமாக நடந்த சுவையான இவ்விவாதத்தில் சுமார் 10லட்சம் மக்கள் குழுமியிருந்து ரசித்தார்கள்.

'ஐக்கிய இலங்கை' என்ற தலைப்பில் கொலம்பியா பல்கலைக் கழகத் தலைவர் பேராசிரியர் ஜீவாகனேபொலவும், 'சர்வதேச ஈழ ஆதரவாளர்' சார்பில் சட்டத்தரணி கேக்லி போலும் இவ்விவாதத்தில் கலந்துகொண்டனர்.

1956ல் அமுலான தனிச்சிங்களச் சட்டம்முதல், தோட்டத்தொழிலாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்ட பிரஜாவுரிமைகள்வரையிலான இலங்கையின் சரித்திரப் பின்னணி இவ்விவாதத்தில் ஆராயப்பட்டது. [ய-பி]

# இ. தொ. கா. மேதின விழாவில் ஒரு லட்சம் மக்கள்

[ஹற்றன்]

இ. தொ. காங்கிரஸின் மேதின விழா பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நுவரெலியா ரதல்ல என்ற விளையாட்டரங்கில் நேற்றுக்காலை நடைபெற்றது.

இ. தொ. கா. தலைவரும் கிராமியத் தொழில்துறை துறை அமைச்சருமான திரு எஸ். தொண்டமான் தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

சுமார் ஒரு லட்சம் மக்கள் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் பேசிய அமைச்சர், ஒற்றுமையாக இருந்தால் எதனையும் வென்றெடுக்கலாம் என வலியுறுத்தினர். இலங்கை தொழிலாளர் கா. செயலாளர் திரு. எம். செல்லச்சாமி, உதவி பொ. ச்செயலாளர் திரு. கே ராஜ உட்பட பலர் உரைநிகழ்த்தினர்.

இது விஷயம இவ்வாறிருக்க தலவாக்கொல்லை தோட்டப் பகுதியல், இ. தொ. காங்கிரஸின் மேதின விழா சம்பந்தமான அறிவித்தல்சுவரொட்டிகளும் அமைச்சர் தொண்டமானின் ஆள்உயரப்படமும் சிதைக்கப்பட்டது.

இச்சம்பவத்திலீடுபட்டிருந்ததாகக் கூறப்படும் சிலசிங்கள முதலாளிமார் பொலிசாரினல் எச்சரிக்கைசெய்யப்பட்டதாகத் தெரியவருகிறது (மா)

## பாலையூற்றில் இருவர் கைது

(திருகோணமலை)

பாலையூற்றுப் பகுதியிலும் க. கதிர்காமநாதன், க. ராஜசேகரன் ஆகிய இருவரும் ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (மா)

## அரசு அறிவிப்பு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள், பொலிஸ் நிலையங்கள் ஆகியவற்றில் சரணடையலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஹட்டனில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று இங்கு நடைபெற்ற மேதினக்கூட்டத்தில் விசேஷ பேச்சாளராகக் கலந்துகொண்ட கலவான எம். பி திரு. சரத்முத்தெட்டுவேகம பேசுகையில் மேற்குறிப்பிட்ட சம்பவத்தை வன்மையாகக் கண்டித்தார்.

சுமார் 25 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் இக்கூட்டத்துக்கு சமுகமளித்திருந்தனர்.

''தொழிலாளர்களால் சுதந்திரமாக உரிமைக்குரலாக வெளிப்படுத்தப்பட்ட மேதின அலங்காரங்களை இங்கு அகற்றிய பொலிசார் வடபகுதிக்கு சென்று இதே நாசவேலையைச் செய்யட்டும் பார்ப்போம்'' என்று கேள்வி எழுப்பினர் இச்செயல் அரசாங்கத்தின் தூண்டு கோலால் தான் செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் குற்றம் சுமத்தினர்.

''தமிழர்களின் கோரிக்கை நியாயமானது, நீதியானது என்று தெரிவித்த திரு முத்தெட்டுவேகம, தென்பகுதி மலையகப்பகுதித் தொழிலாளர்களிதும், வடபகுதித் தொழிலாளர்களிதும் உரிமைக்கு உதவிசெய்யவேண்டும் என்று வலியுறுத்தினர்.

தொடர்ந்து பேசிய அவர் ஒரு கட்டத்தில் அமைச்சர் திரு. தொண்டமானையும் அரசாங்கத்தின்நடவடிக்கைகளையும் தாக்கிப்பேசினர்.

செங்கொடிச் சங்க உறுப்பினர்களும் இக்கூட்டத்தில் உரைநிகழ்த்தினர். (மா)

## உல்லாசப் பயணசபைக்கு வயது 1000

(யாழ்ப்பாணம்)

உல்லாசப்பயணசபையின் ஞாபகார்த்தமாக இலங்கை அரசாங்கம் வெளியிட்டுள்ள ஆறு ரூபா முத்திரையல் குளறுபடியான முறையில் தமிழ் இடம்பெற்றுள்ளது.

இமுத்திரையில் உல்லாசப்பயணச்சபையின் 10ஆண்டு நிறைவைக்குறிப்பதாகவுள்ள வார்த்தை ஆங்கிலத்தில் '10th Annuessary' எனவும் தமிழில் '10ம் நூறருண்டு' எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (கெ)

## திருமலையில் குண்டுச் சத்தம்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் இதுவரை கேட்காதளவிலான பாரியகுண்டொன்று திருமலை நகரில் வெடித்ததைத் தொடர்ந்து பெரும் அதிர்ச்சி ஏற்பட்டுள்ளது.

நேற்றிரவு 7-35 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது. இக்குண்டுச் சத்தத்தைத் தொடர்ந்து துப்பாக்கிச்சூட்டுச் சத்தங்கள் கேட்டன.

குண்டுவெடிப்பு அதிர்ச்சியினல் நகரிள்ள பல வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [மா]

## பராமரிப்பு நிலையம்

(உடுவில்)

தென்இந்திய திருச்சபையின் ஆதரவில் சண்டிலிப்பாயில் பகல் பராமரிப்பு நிலையம் ஒன்றுஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இநநிலையத்தின் உதவி ஊழியர் திருமதி ஏ. ஆர். தம்பியப்பா தலைமையில் பகல் பராமரிப்பு நிலையத்தை வண. பிதா. ஜெயக்குமார் திறந்து வைத்து உரையாற்றினர்,

எம்பயர் திரையில்
பானுசந்தர்—அனுராதா
கைதியின் சவால்

லிடோ Jaffna
10-30, 2-30, 4-30 6-30
BODY AND SOUL
(Colour)

2வது மாதம்
வெலிங்டன
10-30, 2-30, 6-15
சிவகுமார், மோகன் அம்பிகா, கவுண்டமணி நடித்த
நான் பாடும் பாடல்
(கலர்)

லிபேட்டி சினிமாவில்
ரொப்லரின்
புதிய வெளியீடு
அன்று SUPER MAN
இன்று SUPER GIRL
Fare Dunaway நடித்த
அதிக வசூலைக் கொடுத்த
அழகோவியம்
10-30, 2-30, 4-45, 7-00
காட்சிகள் காண்பிக்கப்படும்.

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
வெள்ளிக்கிழமை 2-5-86

# "வடக்கு, கிழக்கை தமிழர் தாயகமாக அரசு அங்கீகரிக்கவேண்டும்"

## இடது கம்யூ. மேதினக் கூட்டத்தில் உரை

(யாழ்ப்பாணம்)

"தொழிலாள வர்க்கத்தின் பொது எதிரியான ஐ. தே. கட்சிக்கு எதிராகச் சகலஇடது சார்களும் ஐக்கியப்பட்டுப் பாராடவேண்டும். ஒன்றுபட்ட மக்கள் சக்தியின் மூலம் தான் தொழிலாள வர்க்கத்தின் உரிமைகளை வென்றெடுக்க வேண்டும்"

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி [இடது] யின் மேதினக் கூட்டத்தில் திரு கே. செந்தில்வேல் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். பல்கலைக் கழகத்திற்கு அருகாமையில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு கட்சியின் பொதுச் செயலாளர் திரு கே. ஏ. சுப்பிரமணியம் தலைமை தாங்கினார்.

இக்கூட்டத்தில் திரு. கே. செந்தில்வேல் தொடர்ந்துபேசுகையில்:' 1956-ம் ஆண்டுக்குப் பின்தான் அமரர் பண்டாரநாயக்கா மேதினத்தை அங்கீகரித்துக் கூட்டங்களை நடாத்த வழி வகுத்தார். தொழிலாள, விவசாயப் பாட்டாளி வர்க்கத்தினரின் மேதினக்கூட்டங்களை ஏகாதிபத்திய ஐ. தே. க. அரசு ஆடல் பாடல்களுடன் காலிமுகத்திடலில் வருடா வருடம் நடத்திவருகிறது', என்று கூறினார்.

திரு. கே. ஏ. சுப்பிரமணியம் தலைமையுரையில் கூறியதாவது:

மக்களுக்குரிய நீதி, சுதந்திரம் நசுக்கப்படும்போது, பலாத்காரம் முளைக்கிறது. தமிழ்மக்களுக்கு வழங்கப்படவேண்டிய உரிமைகள் வழங்கப்படவேண்டும் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களைத் தமிழ்மக்களின் தாயகமாக அரசு அங்கீகரிக்கவேண்டும். அப்போதுதான் நாட்டில் அமைதி நிலவும்" என்று கூறினார்.

கூட்டத்தில் மற்றும் திரு வாளர்கள் எஸ். ரவீந்திரன், சோ. தேவராசா ஆகியோரும் பேசினார்கள்.

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி [இடது]யின் மேதின ஊர்வலம் நேற்று முற்பகல் 11 மணிக்கு நல்லூர் இந்துவிடுதியிலிருந்து ஆரம்பமானது. ஐ. தே கட்சி அரசாங்கத்துக்கு எதிரான செந்நிற பதாகைகளையும், செந்நிறக்கொடிகளையும் தாங்கிய வண்ணம் பெருந்தொகையான தொழிலாளர்கள், விவசாயிகள், உழைப்பாளிகள், கிராமிய மக்கள் ஊர்வலத்தில் கலந்துகொண்டார்கள். ஊர்வலத்தில் பெண்களே அதிகமாகக் காணப்பட்டனர்.

"தொழிற்சங்க உரிமையைப் பறிக்காதீர், தொழிலாளி வர்க்கத்தை அளக்காதீர்.

"பேரினவாத யூ. என். பி.யே இளைஞர்களை உடனே விடுதலைசெய், மனித உரிமைகள் என்னாச்சு, மனித வதை வதையில் விலைபோச்சு.

வடக்குக்கிழக்குத் தமிழ்ப் பிரதேசம் தமிழருக்கு வழங்கும் பிரதேச சுயாட்சி.

"தமிழர் இரத்தம் குடிக்காதே. இனப்படுகொலைகளை உடனே நிறுத்து. தடை வலயங்களை உடன் அகற்று" என்பன போன்ற சுலோகங்களை ஊர்வலத்தினர் கோஷித்துச் சென்றனர். (வா)

## இந்து இளைஞர் தொண்டர் கைது

(திருகோணமலை)

திருமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவைத் தொண்டர்களில் ஒருவரான கிருஷ்ணபிள்ளை உதயச்சந்திரன் (25-வயது என்பவர் ஆயுதப்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். (மா)

## வல்வைப் பகுதியில் பதற்றம்

[வல்வெட்டித்துறை]

குடாநாட்டில் பரபரப்பாகப் பேசப்படும் இளைஞர் கோஷ்டிகளிடையே ஏற்பட்ட மோதல் காரணமாக இப்பகுதி மற்றும் சுற்றுப்புறங்களில் மக்களிடையே பீதிநிலை ஏற்பட்டுள்ளது. இதனால் சந்தைகள் கடைகள் நேரகாலத்துடன் பூட்டப்படுகின்றன. தெருக்களிலும் மக்கள் நடமாட்டம் குறைந்து காணப்படுகிறது. பஸ்போக்குவரத்துக்கள் கடந்த இரண்டு நாட்களாகத் தடைப்பட்டிருந்தன.

நேற்று இப்பகுதியிலிருந்து ஒரு சில தனியார் பஸ்கள் யாழ் சேவையில் ஈடுபட்டன. இருந்தும் சகல பகுதிகளிலும் சீரற்ற நிலைமையே தென்படுகின்றது.

## போராளிகள் மோதல்: மட்டக்களப்பில் 11 பேர் பலி

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு வாவிக்கு மேற்குப்புறமுள்ள படுவான் கரைப்பிரதேசத்தில் இரு போராளிகள் குழுக்களுக்கிடையே திடீரென மோதல் ஆரம்பித்தது.

இப்பிரதேசத்திலுள்ள மணல்பிட்டி, கொத்தியாபுலை வீதயிலுள்ள ஒரு இயக்கத்தின் தற்காலிக முகாமில் இருந்த 8 போராளிகளும் அதே பிரதேசத்திலுள்ள தாண்டியடி என்ற இடத்தில் 3 போராளிகளுமாக 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

மட்டக்களப்பு நகரை அடுத்துள்ள கூலாவடி, ஆரையம்பதி பஞ்சந்தொடுவாய் முதலான இடங்களிலிருந்து ஒரு இயக்கத்தைச் சேர்ந்த 10க்கு மேற்பட்ட போராளிகள் கடத்தப்பட்டுள்ளனர்.

இது இவ்வாறிருக்க மட்டக்களப்பில் பாதுகாப்புபடையினர் மற்றொரு தீவிரவேட்டைக்குத் தயாராகி வருவதாக கூறப்படுகிறது. (மா)

## கைதாவோர் அப்பாவிகளா?

## விடுவிப்பதற்கு கிராமசேவகர் சிபார்சு தேவை

[புலோலி]

வடமராட்சிப்பகுதிக்கடலில் வைத்து கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு பலாலி இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆறு மீனவர்களையும் விடுதலை செய்யக் கோரி வடபகுதி இராணுவ இணைப்பதிகாரி பிரிகேடியர் ஹியூபிரட் ரூபசிங்காவிடம் பருத்தித்துறைப் பிரஜைகள் குழு சென்றபோது மீனவர்களை விடுதலைசெய்ய மறுப்புத் தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறையிலுள்ள முனை, நாகர்கோவில் தாளையடிப்பகுதிக் கடலில் வைத்துக் கைதுசெய்யப்பட்ட ஆறுமீனவர்களையும் விடுதலை செய்யக் கோரி பருத்தித்துறை பிரஜைகள்குழு உதவிச் செயலாளர் திரு தேவராஜன் தலைமையில் கைதுசெய்யப்பட்ட மீனவர்களின் உறவினர்கள் வடபகுதி இணைப்பதிகாரி பிரிகேடியர் ஹியூபிரட் ரூபசிங்காவைச் சந்தித்தனர்

அப்போது பிரஜைகள் குழுவிற்கு பிரிகேடியர் ஹியூபிரட் ரூபசிங்காவினால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை திரு தேவராஜன் நமது நிருபரிடம் தெரிவித்தார். அக்கருத்துக்கள் வருமாறு:-

"இனிமேல் எந்தப்பகுதியில் வாழ்பவராவது பாதுகாப்புப் படையினர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்கிறார்களோ அப்பகுதிக் கிராமசேவை அலுவலர் இராணுவ முகாமிற்கு வந்து தைதானநபர் நிரபராதி என்பதுபற்றி வாக்குமூலம் தரவேண்டும். கிராமசேவை அலுவலர்கள் அரச ஊழியர்களாவர் அவர்கள் இந்த உதவிகளைச் செய்து எமது விசாரணைகளை முடிக்கக்கட்டுப்பாடு உடையவர்கள். இக்கடமையிலிருந்து கிராமசேவை அலுவலர்கள் வழுவக்கூடாது.

இதுகாலவரை சமயகுரவர்கள். சமூகப்பிரமுகர்கள் முலனிலையில் அப்பாவிகளை விடுதலைசெய்துவந்தேன். ஆனால் இப்போது இந்நடைமுறை மாற்றவேண்டி ஏற்பட்டுள்ளது. இதனால் நான் இந்த நடைமுறையை மாற்றிவிட்டேன்

"எமது விசாரணை பூர்த்தியடைய கிராமசேவை அலுவலரின் சாட்சியம் மிக அவசியமாகும் கிராமசேவை அலுவலர்கள் வந்து தமது அப்பாவிக் கிராமமக்களுக்கு உதவமுடியாவிட்டால் என்றால் எவ்வாறு உதவமுடியும்? கிராமசேவை அலுவலர்கள் வந்து விசாரணைகளைப் பூர்த்தியாக்கத் தவறினால் சந்தேகநபர்களை பூஸ இராணுவமுகாமிற்கு அனுப்ப வேண்டி ஏற்படும். அப்பாவி மக்களுக்காக நான் இரக்கப்படுகின்றேன் ஆனால் விசாரணைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய பாரிய கடப்பாடும் எனக்கு உண்டு இதனைக்கருத்திற்கொண்டு கிராமசேவை அலுவலர்கள் இனிமேல் தமது கடமையைச் செய்து ஒத்துழைக்கவேண்டும்."

கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுவிக்கச் சென்ற பிரஜைகள் குழுவினரும் உறவினர்களும் மீனவர்கள் விடுவிக்கப்படாத நிலையில் திரும்பினர்.

## கிளிநொச்சியில் பதற்றம்: ஒருவர் பலி

[கிளிநொச்சி]

கிளிநொச்சி பழைய கொலனிப்பக்கமாகநேற்றுமுன்தினம் திடீரெனக் கேட்ட துப்பாக்கி வேட்டுகளாலும் குண்டுச் சத்தங்களாலும் கிளிநொச்சி நகரம் பெரும் பதற்ற நிலைக்காளானது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து பல கவசவாகனங்கள் நகரைச் சுற்றிவலம் வந்தன. சாதாரண உடை தரித்தோர் இளைஞர் ஒருவரைச் சுட்ட போதே பதற்றம் ஏற்பட்டது. அந்த இளைஞர் பலியானார்.

பலியானவரையும் ஏற்றிக்கொண்டு கவச வாகனங்கள் முகாம்திரும்பின. அதன் பின்பே கிளிநொச்சி நகரில் நிலவிய பதற்றம் நீங்கியது.

இதனிடையே கடந்த திங்கட்கிழமை லொறி ஒன்றில் சாதாரண உடைதரித்தோர் ஆயுதங்கள் சகிதம் பரந்தனை நோக்கி கண்டி வீதியால் சென்றனர். சில நிமிடங்கள் செல்ல ஏழு கவசவாகனங்கள் முகாமில் இருந்து கண்டி வீதியால் பரந்தன்பக்கம் என்றுமே இல்லாத வேகத்தில்சென்றன. சில நிமிடங்களில் லொறிகளில் சென்றோரையும் ஏற்றிக் கொண்டு கவசவாகனங்கள் முகாம் திரும்பின.

இதேவேளை கிளிநொச்சி நிலைமை மிகவும் மோசமடைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. வர்த்தகம், தொழில் முயற்சிகள், விவசாயம், கல்வி அனைத்துமே பாதிப்படைந்துள்ளன.

## இராணுவம் உள்ளே திரும்பியது

(வல்வெட்டித்துறை)

நேற்றுமுன்தினம் இரவு வல்வெட்டித்துறை இராணுவ முகாமிலிருந்து தெற்குப் புறமாக வெளியேற முயன்ற இராணுவத்தினரை நோக்கி விடுதலைப் போராளிகள் தொடர்ச்சியாகத் துப்பாக்கிக் குண்டுகளை வீசினர். இதனையடுத்து வெளியே வரும் முயர்சியை இராணுவத்தினர் கைவிட்டு முகாமுக்குத் திரும்பிச் சென்றனர்.

## ஷெல்தாக்கி வயோதிபப்பெண் மரணம்

[யாழ்ப்பாணம்]

கொட்டிலில் இருந்தபோது ஹெலிக்கொப்டரிலிருந்து சுடப்பட்ட ஷெல் தாக்கியதால் கட்டுவனைச் சேர்ந்த 67 வயதான பொன்னம்மா என்ற வயோதிபப்பெண் மரணமானார்.

யாழ். பதில் நீதவான் திரு. ஏ. அன்ரனி நேற்று இம்மரணம் சம்பந்தமான விசாரணையை நடத்தினார்.

இம் மாதம் 1ம் தேதி காலை ஹெலிககொப்டர் வட்டமிட்டுச் சுட்டபோது இப்பெண் காயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு நேற்று முன்தினம் மரணமானார் எனத் தெரிவிக்கப்பட்டது.

பிரேத பரிசோதனைக்கு [illegible] தரவிட்டு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது. [க]

## மரண அறிவித்தல்

### திரு. வேலுப்பிள்ளை கந்தையா

கடந்த 28-4-1986 திங்கட்கிழமை காலமான கரவெட்டி மேற்கு, பழைய ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர் திரு. வேலுப்பிள்ளை கந்தையாவின் ஈமக்கிரியைகள், இன்று மாலை (2-5-86) 4 மணியளவில் நடைபெறும் என்பதை நண்பர்களுக்கும், உற்றார் உறவினர்களுக்கும் அறியத்தருகிறோம்.

(C 2095)

### திருமதி சேதுபதி நாகம்மா

நெடுந்தீவைச் சேர்ந்த திருமதி சேதுபதி நாகம்மா அவர்கள் 01-05-86இல் காலமானார் அன்னார் சேதுபதி [முன்னாள் கிராமசேவையாளர்] அவர்களின் மனைவியும், ஜீவரத்தினம் [கிராம சேவையாளர் வன்னேரிக்குளம்], தருமரத்தினம் [சவூதிஅரேபியா], நிர்மலரத்தினம் [சவூதி அரேபியா], அமிர்தராணி, சந்திரராணி ஆகியோரின் தாயாரும், ரதிதேவி [ஆசிரியை, பாவற்குளம்], கேதீஸ்வரி ஆகியோரின் மாமியாரும், மதரூபன், நிரோஜினி ஆகியோரின் பேத்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் நெடுந்தீவில் 03-05 86 சனிக்கிழமை அன்று நடைபெறும் உற்றார் உறவினர் நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

(C 2088)

### யோசவ் கிறிஸ்ரி ஜெரூட் யோகராசா

சில்லாலையைச் சேர்ந்த கிறிஸ்ரி, ஜெரூட் யோகராசா அகால மரணமானார். இவர் யோசவ், சிசிலியா தம்பதிகளின் புதல்வரும், புஷ்பராசா, பிரேமராசா மாலினி சுவிற்சலாந்து], பிறேமினி, ஜெயராசா, ரட்ணராசா ஆகியோரின் சகோதரரும், றெஜினோல்ட் (சுவிற்சலாந்து), அரியமலர் அனற் அவர்களின் மைத்துனரும், நிஷ்மனின் மாமனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை 02-05-86 பி ப. 4 மணிக்கு சில்லாலை சேமக்காலையில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சில்லாலை.

தகவல்:- யோசவ் சிசிலியா.

[CR/A 633]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில 1986-ம் ஆண்டு மே மாதம் 2-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P O Box 49, Telegram, Eelanadu, Telephone 22389, 24126.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org